**த. நா.ச.பே. எண் : 011** **நாள் : 21.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.3.2018) சட்டப்பேரவையில், மணல் குவாரி தொடர்பாக விளக்கம் அளித்தார்கள்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, மணல் குவாரி இன்னும் திறக்கப்படவில்லை என்ற செய்தியை சொல்லுகின்றார். சில பொதுநல வழக்குகள் நீதிமன்றத்திலே உள்ள காரணத்தினாலே, பல மாதங்களாக அந்த வழக்கு நடைபெற்று, இப்பொழுதுதான் நமக்கு தீர்ப்பு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. பொதுநல வழக்கு சிலபேர் போட்ட காரணத்தினாலே நீதிமன்றத்திற்கு சென்று அது தடை செய்யப்பட்டது. இப்பொழுது கிடைக்கப் பெற்ற பிறகு, அரசாங்கமே மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, இப்பொழுது குவாரிகள் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது, முழுக்க முழுக்க எவ்வித தவறும் நடக்கக்கூடாது என்பதற்காக அரசு சில வழிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தம் கோரப்பட்டது. கடந்த 15 நாட்களுக்கு முன் ஒப்பந்தம் கோரப்பட்டது. ஒருசில குவாரிகளுக்கு எடுத்திருக்கின்றார்கள். மற்ற குவாரிகள் யாரும் முன்வரவில்லை. மீண்டும் நாளையதினம் ஒப்பந்தம் கோர இருக்கின்றார்கள். விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டு இருக்கின்றது. இதிலே எந்தத் தவறும் ஏற்படக்கூடாது என்பதற்காக கடுமையாக அந்த விதிகள் எல்லாம் வகுக்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தம் விடுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டு, விரைவிலே ஒப்பந்தம் விடப்பட்டு, குவாரிகள் துவக்கப்பட்டு, அரசாங்கமே அந்தக் குவாரிகளை நடத்தும். அதாவது, ஆற்றிலோ அல்லது ஓடையிலோ இருந்து அள்ளுகின்ற மணல் Yard–க்கு வர வேண்டும். அள்ளுகின்ற இடத்திலே சிசிடிவி கேமரா பொருத்தப்படும். அதேபோல, அந்த ஆற்றுப் பகுதியிலோ அல்லது ஓடைப் பகுதியிலோ இருந்து அள்ளிக் கொண்டு வருகின்ற அந்த மணல், Yard இடத்திற்கு சேர்க்கின்ற அளவிற்கு ஒரு ஒப்பந்தம். அதற்கு, Poclain மற்றும் லாரிகள், டிப்பர் போன்ற வாகனங்கள் மூலமாக எடுத்து வர வேண்டும். அதற்கு என்னென்னவெல்லாம்

வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாகனத்திற்கு GPS பொருத்தப்பட வேண்டும். ஏனென்றால் அந்த வாகனம் Yard–க்கு தான் வந்து செல்கிறது என்ற தகவலை அரசு பெறுவதற்காக இந்த வழிமுறை வகுத்திருக்கிறது. அதேபோல, Yard–க்கு வந்த பிறகு, அங்கேயும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, அங்கேயும் யார் யார் எல்லாம் மணல் வேண்டி ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கிறார்களோ அது பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மணல் விநியோகம் செய்யப்படுகிறது. பணம் ஆன்லைனிலே கட்டப்படுகிறது. ஆக, இப்படி எல்லாமே சட்டத் திட்ட விதிகளின்படி கடுமையாக்கப்பட்டு, எந்த இடத்திலும் தவறு ஏற்படாதவண்ணம் நீதிமன்றத்தினுடைய வழிமுறைகளை பின்பற்றி, மணல் குவாரிகளை துவக்குவதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அரசால் பல்வேறு மணல் குவாரிகள் துவக்கப்பட்டு, பொதுமக்களுக்குத் தேவையான மணல் தட்டுபாடின்றி வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல், வெளிநாட்டில் இருந்து மணல் இறக்குமதி செய்வதற்கும் இப்போது ஒப்பந்தம் கோரப்பட்டுவிட்டது. அதற்கும், சில விதிமுறைகளை வகுத்து ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆன்லைன் மூலமாகவே ஒப்பந்தம் பெறப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, வெளிநாட்டிலிருந்தும் மணல் இறக்குமதி செய்யப்பட்டு, அரசாங்கமே அதையும் விற்பனை செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்வது வரைக்கும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. மணல் சென்னைக்கு வந்தவுடன் அல்லது தூத்துக்குடிக்கு வந்தவுடன், அரசு அதை எடுத்து விற்பனை செய்யும். அங்கேயும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, யார் யாரெல்லாம் மணல் வேண்டி விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கும் தங்குதடையில்லாமல் மணல் விநியோகம் செய்ய வெளிநாட்டிலிருந்தும் மணல் இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். (குறுக்கீடு)

முன்பு வெளிநாட்டிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட காரணத்தினால் நிறுத்தப்பட்டு இருக்கின்றது. அதிலே சிலிகான் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, இறக்குமதி செய்யப்படுகின்ற மணல் கூட, ஒவ்வொரு முறையும் சோதனை செய்யப்பட்ட பிறகு தான் அந்த மணலை விநியோகம் செய்கிறோம். ஏனென்றால், மணல் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும்போது, கலப்பட மணலா, அது கட்டுமானத்திற்கு உகந்ததா, என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையிலே அது சரி என்று வந்த பிறகுதான் அந்த மணல் விற்பனைக்கு அரசால் அனுமதிக்கப்படுகிறது என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

இனிமேல் தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் தனியார் யாரும் மணல் விற்பனை செய்வதற்கு அனுமதி கிடையாது என திட்டவட்டமாக அரசால் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதற்கு தேவையான சட்டமும் இயற்றப்பட்டுவிட்டது. ஆகவே, யார் கொண்டு வந்தாலும், அரசின் மூலமாக தான் அந்த மணலை விற்பனை செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் இஷ்டம் போல விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டால், நம்முடைய ஆற்றுப் பகுதி இருக்கிறது; ஓடை பகுதி இருக்கிறது, எங்கு வேண்டுமானாலும் மணலை அள்ளிக் கொண்டு சென்றுவிடுவார்கள். யாரும் கட்டுப்படுத்தவே முடியாது. ஆகவே தான், அரசாங்கமே அந்த மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து அதனுடைய தொடர்ச்சியாகத்தான் மாநிலத்திலும் சரி, வெளிநாட்டிலும் சரி, வெளிமாநிலத்திலும் சரி, மணல் கொண்டு வருகின்றபோது அரசின் மூலமாகத்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**